Registered as a Newspaper in Srilanka
விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 05 வெள்ளிக்கிழமை (19.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 151

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## விடுதலைப்புலிகள் மீது

# ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தால்

# அது அமைதிமுயற்சிகளுக்கு பேராபத்து

### அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் எச்சரிக்கை

(லண்டன்)



சர்வதேசத்தின் மேலதிக எந்த வொரு தடை நடவடிக்கையும் அது ஏற்கனவே பலவீனமடைந்துள்ள அமைதி முயற்சிகளை மிகக்கடு மையாக எதிர்மறையாக பாதிக் கும் என்று தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எச்சரித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்கக்கூடும் என்ற செய்திகள் தொடர்பாக தமிழ் நெற் இணையத்தளத்திற்கு அவர் அளித்துள்ள நேர்காணலி லேயே இதனைத் தெரிவித்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கூட்டமைப்பின்

# உள்ளூராட்சி சபை வேட்பாளர் அம்பாறையில் சுட்டுக்கொலை

அம்பாறையில் தமிழ்த்தேசியக்கூட்ட மைப்பின் சார்பில் உள்ளூராட்சி சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் சுட்டுக்கொல லப்பட்டுள்ளார்.

இன்று நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் பாலசுந்தரம் கமல ராஜ் (வயது 32) என்பவரே நேற்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நற்பிட்டி முனை கல்முனையைச் சேர்ந்த இவர் தனது நண்பர் ஒருவருடன் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர்.

இதில் பாலசுந்தரம் கமலராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவருடன் சென்ற பாஸ்கரன் சுரேஸ் (வயது34) படுகா யமடைந்த நிலையில் அம்பாறை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் இவர்கள் சென்று கொண்டிருந்த வேளையில் படையினரும் துணை இராணுவக்குழுவின ரும் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு அப்பகுதியில் உள்ள காவல் நிலையத்திற்குள் சென்றதாக நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளதாக அம்பாறை மக்கள் தெரிவித்தனர். (ச–05)


# இந்தியக் கடற்பரப்பில் கண்காணிப்பு அதிகரிப்பு

(சென்னை)

இலங்கையில் அதிகரித்துவரும் வன் முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து இந்தியா விற்கும் இலங்கைக்கும் இடையிலான கடற் பரப்பில் இந்தியா தனது கண்காணிப்பை அதிகப்படுத்தியிருப்பதாக இந்தியாவின் கடற் படை தலைமைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஸ் தெரிவித்தார்.

தமிழக தலைநகர் சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

இலங்கையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வான் பிரதேசமும் கடற் பிரதேசமும் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்று விடுதலைப்புலிகளின் சார் பில் முன்வைக்கப்படும் கருத்து பற்றி இந்தி யாவின் நிலைப்பாடு என்ன என்று கேட்கப் பட்டபோது, அதில் தங்களின் நிலைப்பாடு என்று ஒன்றும் கிடையாது என்றும் அது இலங்கையின் உள் விவகாரம் என்றும் கூறிய அவர் அதே சமயம் ஒரு இடத்தில் ஒரே ஒரு (08 ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நாவின் செயலாளர் கொபிஅனானை நேற்று டோக்கியோவில் இலங்கையின் வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமை பற்றி கலந்து ரையாடிய போது...

# கொலையாளிகளைக் கண்டால் அடையாளம் காட்ட முடியும்

## நீதிமன்றில் சாட்சி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் வீட்டினுள் வைத்து தமது உறவினர்கள் மீது ஆயுதபாணிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை தாம் நேரில் கண்டதாக இரண்டு பெண்கள் நேற்று சாட் சியமளித்துள்ளனர்.

தீவகத்தில் இடம்பெற்ற படுகொலை சம் பவங்கள் தொடர்பாக இரண்டாவது நாள் விசாரணைகள் நேற்று ஊர்காவற்றுறை நீதி மன்றில் நீதியாளர் றொக்ஸி முன்னிலை யில் நடைபெற்றது.

சம்பவ தினத்தன்று வீட்டினுள்ளே நான்கு பேர் வந்தனர். அவர்களிடம் கடற் படையினர் வைத்திருப்பது போன்ற துப்பாக் கிகள் இருந்தன. அவர்கள் தமது உறவினர் கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை தாங்கள் கண்டதாக முதலாவது சாட்சி தெரி வித்துள்ளார்.

இதேவேளை மூன்று ஆயுததாரிகள் குறிப்பிட்ட வீட்டினுள் சென்றதைக் கண்ட தாகவும் அவர்களில் இருவர் கடற்படையின ருடன் இணைந்து முன்னர் ரோந்து சென்ற தை தான் கண்டதாகவும் இரண்டாவது சாட்சி நேற்று நீதிமன்றில் (08 ஆம் பக்கம் பார்க்க)

# கொக்குவிலில் கிரனைட் வீச்சு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாளிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவக்காவலரண் மீது நேற்றுக் காலை 7 மணியளவில் மேற்கொள் ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இத் தாக்குதலையடுத்து இராணுவத்தி னர் சரமாரியாக துப்பாக்கிச் சூட்டினை மேற் கொண்டனர். சிறிது நேரத்தில் அப் பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சுற்றிவளைப்புத் தேடுதலும் மேற்கொள்ளப் பட்டது. இதன்போது மோட்டார் சைக்களில் சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டதாக தெரி விக்கப் பட்டது. (ச–15,132,133)

# கடற் கண்காணிப்புக்கு உதவ அரசாங்கம்தயார்

தமிழர் தாயகக் கடற்பரப்பில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அரசாங்கப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல இது பற்றித் தெரிவிக்கையில்,

கண்காணிப்புக்குழுவினரது தேவைகள் குறித்து அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தும்போது அதை செய்துகொடுப்பதில் அரசாங்கத்துக்கு எதுவித சிக்கலும் இல்லை. கடற் கண்காணிப்புப் பணியை கண்காணிப்புக்குழுவினர் முற்றாக நிறுத்தவில்லை. அது தற்காலிகமான இடைநிறுத்தம் தான் என்று அரசாங்கத்திடம் கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

வெற்றிலைக்கேணியில் பாரிய அசம்பாவிதம் ஒன்று விமானப் படையினரது உதவியால் தவிர்க்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அமைதி முயற்சிப் பணிகளின் போது உயிர்நீத்திருக்கும் அரச படையினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாட்டினது பாதுகாப்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும். மக்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களை கேடயமாக்க முயற்சிக்கின்றனர் என்றார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உடனிருந்த இராணுவப் பேச்சாளர் பிரசாத் அமரசிங்க கூறுகையில்,

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது அரச படையினரை இலக்குவைத்து கண்ணிவெடிகளை விடுதலைப் புலிகள் புதைத்து வைத்தனர். முச்சக்கர வண்டிகளையும் உந்துருளிகளையும் கொண்டு அரச படையினர் மீது அவர்கள் தாக்குதல் நடத்துகின்றனர் என்றார். இதேவேளை கடற்கண்காணிப்பு தொடர்பாக தங்களது தேவைகள் என்ன என்பது குறித்து இரு தரப்பினருக்கும் பட்டியல் ஒன்றை அளித்துள்ளதாக கடந்த செவ்வாய்க்கிழமை கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

# மானியம் வழங்கப்படாவிடின் எரிபொருட்களின் விலை உயரும்

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி மானியம்வழங்காவிட்டால்மீண்டும் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க நேரிடும் என்று போக்குவரத்து எண்ணெய்வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு மாதத்திற்கு இரண்டு பில்லியன் ரூபா நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையை நீடிக்க விடமுடியாது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி மானியம் வழங்க வேண்டும். இல்லாவிட்டால் எரிபொருட்களின் விலைகளை மீண்டும் ஒருமுறை அதிகரிப்பதனை தவிர வேறு வழியில்லை.



தொடர்ந்து எம்மால் நஷ்டத்தில் இயங்க முடியாது.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக திறைசேரியிடமிருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். (கு)

# யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக செயற்படுத்துக!

## இந்தியா அறிவுரை

அண்மையில் இந்தியா சென்றிருந்த மங்கள சமரவீர இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி மோகன்குமார் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமானது கூட்டாட்சி முறையில் தீர்வுகாணவும் முடிவு செய்திருப்பதாகவும் ஜே.வி.பியினரும் இதற்கு ஆதரவளித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்தி நாட்டை இன்னொரு போருக்குச் செல்ல விடாமல் தடுக்குமாறு மங்களவுக்கு இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

மேலும் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களினது பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றும் தமிழர்களுக்கான மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மங்களவின் இந்தியப்பயணத்துக்கு முன்னதாக ஜே.வி.பி. பரப் புரைச் செயலாளர் விமல் வீரவன்சவை மங்கள சமரவீர சந்தித்துப் பேசியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு)

# 54 அகதிகள் தமிழகம் சென்றனர்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 54பேர் அகதிகளாக நேற்று முன்தினம் மண்டபம் சென்றடைந்துள்ளனர். இதேவேளை கடந்த திங்கட்கிழமையன்றும் 34பேர் இலங்கையிலிருந்து அகதிகளாக சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த 54பேரே அங்கு நிலவும் யுத்தசூழ்நிலையை யடுத்து படகுகள் மூலம் அகதிகளாக வந்துள்ளதாக மண்டபம் பகுதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களுடன் இதுவரை சுமார் 900இற்கும் அதிகமானோர் அகதிகளாக மண்டபம் பகுதிக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீகப் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் 'சமயமும் சமூகமும்' என்னும் விடயம் பற்றி க.தர்மதேவர் ஆசிரியர் ஆன்மீகச்சொற்பொழிவாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (க-35)

# ரணில் இன்று நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்றுநாடு திரும்பவுள்ளார்.

அவர் அமெரிக்காவில் தங்கியிருந்த காலப்பகுதியில் வெஸ்ரன் நகரில் அமைந்துள்ள சர்வதேச கல்வி நடவடிக்கைகள் தொடர்பான எம்.ஐ.டி.நிறுவனத்தில் விசேட கற்கை நெறியினை மேற்கொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயகவாதிகளின் மாநாட்டில் கலந்துகொண்ட அவர் விசேட உரை ஒன்றையும் நிகழ்த்தியிருக்கிறார்.

இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் சபை கூடி எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவுள்ளது என ஐக்கியதேசியக்கட்சியின் பிரதிச்செயலாளர்திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார். (க-9)

# இராசி பலன்

**19.05.2006**
**(வைகாசி 5, வெள்ளிக்கிழமை)**
**சஷ்டி காலை 5.55 மணிவரை**
**திருவோணம் மாலை 6.20 மணிவரை**
**இராகுகாலம் 10.22-11.52மணிவரை**
**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | கடின முயற்சி, தெய்வதரிசனம், நண்பர்கள் உதவி, தூரதேசச் செய்தி. |
| இடபம் | எதிர்பாராத செலவு; கட்டுப்பாடு, உஷ்ண வியாதி, காரியதாமதம். |
| மிதுனம் | மரியாதைக்குறைவு, வேலைச்சுமை, வாகன பயம், போசனசுகம். |
| கடகம் | தெய்வதரிசனம், எடுத்தகாரியம், கைகூடும், அபூர்வசந்திப்பு, செல்வாக்கு. |
| சிங்கம் | மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், பகைவர் நேசம், தெய்வசிந்தை. |
| கன்னி | மனக்கவலை, காரிய இடையூறு, பூர்வ புண்ணிய கருமம், பணவிரயம். |
| துலாம் | தாய்வழி உறவு, தெய்வசிந்தை, மனச் சஞ்சலம், காரிய தாமதம். |
| விருச்சிகம் | குடும்ப மகிழ்ச்சி, அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், போசனசுகம். |
| தனுசு | கௌரவக்குறைவு, வேலைச்சுமை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், பணவிரயம். |
| மகரம் | தெய்வசிந்தை, புதியமுயற்சி, பெரியோர் சந்திப்பு, தொழில் விருத்தி. |
| கும்பம் | அமைதிக்குறைவு, வீண் அலைச்சல், காரியதாமதம், உறவினர் வெறுப்பு. |
| மீனம் | தொழில்நன்மை, அதிகாரம், போசன சுகம், சுபநிகழ்வு. |

- வளவன்

# தே.அ.அட்டை இல்லாதவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் போது மாணவர்கள் தேசிய அடையாளஅட்டைகள் இன்றியும் தோற்றலாம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அஞ்சல் அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு, அல்லது உறுதியுரை என்பவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியுமென்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (க-9)

## ஊடகவியலாளர்களுக்கு மிரட்டல்;

# தமக்கு தொடர்பில்லை என விடுதலைப்புலிகள் நிராகரிப்பு

(கொழும்பு)

அரச ஊடகங்களில் பணியாற்றுகின்ற தமிழ் ஊடகவியலாளர்கள் வேலையைவிட்டு விலக வேண்டுமென இராவணன் படை என்னும் அமைப்பு இணையத்தளம் ஒன்றின் ஊடாக விடுத்த அறிவித்தலை தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளார்கள்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனையில் ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்த போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரரும் கலந்துகொண்டார்.

ஊடக ஊழியர் தொல்பொருள் சங்கம், பத்திரிகையாளர், சங்கம்த முஸ்லிம் ஊடகப் பேரவை, தமிழ் ஊடகப் பேரவை மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது இராவணன் படைபற்றியோ? அவர்கள் வெளியிட்ட அறிவித்தல் பற்றியோ? தாம் எதனையும் அறிந்திருக்கவில்லை என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சின்னம் பொறித்த இணையத்தளம் தவிர்ந்த ஏனைய இணையத்தளங்களில் வெளியாகும் செய்திகளுக்கு தாம் பொறுப்புக் கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார். தமிழ் மக்கள் அரச ஊடகங்களில் அல்லது ஊடகங்களில் தொழில் புரிவதற்கான உரிமையுண்டு. அத்துடன் இத்தகைய பொய்ப் பிரச்சாரங்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (க-9)

# காலநிலை மாற்றத்தால் பயிர்ச் செய்கையில் தாக்கம்

நாட்டில் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றம் காரணமாக சில பிரதேசங்களில் பயிர்ச்செய்கைக்கான பயிர் இனங்களில்மாற்றம்கொண்டு வரவேண்டியேற்படுமென்று வளிமண்டலவியல்திணைக்களம் தெரிவிக்கிறது. காலநிலை மாற்றம் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களத்தின் காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுநிலையத்தின் சிரேஷ்ட நிபுணர் கலாநிதி சேனக்க பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் காரணமாக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படலாமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வரண்ட பிரதேசங்களிலுள்ள நீர்த் தேக்கங்கள் திடீரென வற்றிவிடும் அபாயம் நிலவும் அதேவேளை அந்தப் பகுதிகளில் திடீரென வெள்ளப் பெருக்குகள் ஏற்படுவதற் கான அபாயமும் நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையின் காரணமாக பருவகால மழைவீழ்ச்சியிலும் மாற்றங்கள் ஏற்படலாமென தெரிவிக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பாக நாடளாவிய ரீதியில் அறிவுறுத்தல்களை வழங்கும் திட்டமொன்றை வளிமண்டலவியல் திணைக்களம் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது. (க-9)

# களுத்துறைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கு பரீட்சை!

எதிர்வரும் க.பொ.த.உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் சிறைச்சாலை கைதிகளுக்காக களுத்துறை சிறைச்சாலையிலும், விழிப்புலனற்றவர்களுக்கு இரத்மலானையிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக பரீட்சைகள்திணைக்கள ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகளில் உள்ள 5 பேர் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். இவர்களுக்காக களுத்துறை சிறைச்சாலையில் பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விழிப்புலன் அற்றவர்களின் நலன்கருதி இரத்மலானையில் பரீட்சைநிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. இங்கு விழிப்புலனற்ற 25பேர் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். அதேவேளை நாடு பூராகவுமிருந்து 2 இலட்சத்து 45 ஆயிரத்து 694பேர் எதிர் வரும் க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

இவர்களில் ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 866பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர் 47ஆயிரத்து 808பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர் இவர்களுக்காக ஆயிரத்து 811 பரீட்சை நிலையங்களும் 267 இணைப்புப்பரீட்சைநிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளது. (க-9)

# வற்வரி சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

தெற்காசியாவை உலுக்கியுள்ள இலங்கையின் வற்வரி மோசடி வழக்கில் 7 சந்தேக நபர்களின் விளக்கமறியல் மே 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிபதி நமல் பண்டார பலலெவிடம் 7 சந்தேக நபர்களும் கடந்த புதன்கிழமை முன்னிலைப்படுத் தப்பட்டனர்.

2ஆவது சந்தேக நபரான ஆனந்த விக்கிரமசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.எல்.எம்.அமீன், ஆனந்த் விக்கிரமசிங்கவுக்கு மாரடைப்பு உள்ளதால் அவர் சிகிச்சை பெற்றிருந்தார். இருப்பினும் அவரையும் நீதிமன்றுக்கு அழைத்து வந் துள்ளனர் என்று கூறினார்.

அவருக்கான உரிய உணவு மற்றும் மருத்துவ வசதிகளை வழங்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் அவர் கேட் டுக்கொண்டார். ஆனால் தனக்கு அத்த கைய அதிகாரம் இல்லை என்று கூறி அக்கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

அண்மையில் கணக்காய்வாளர் தாக் கல் செய்திருந்த வருவாய்த் திணைக்களம் தொடர்பான அறிக்கையின் அடிப்படை யிலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவ தாக இரக சியப் பிரிவு பொலிஸார் நீதி மன்றத்தில் தெரிவித்தனர். (க)

சுன்னாகம்

கதிரமலைச் சிவன் மஹோற்சவம்

6ஆம் நாள்

இன்று லிங்கோற்சவக் காட்சி

நன்பொழில் நாண்மலரும் நன்னகராரே

பொன்போல் மிளிர்புன் சடையன்

தன்னடியார் இடர்களைச் சுமப்பவன்

சுன்னாகம் க்திரமலை மேவியுறை

நன்பொழில் நாண்மலரும் நன்னகராரே

-சிவ. சண்முகவடிவேல்

# கான்ஸ்டபிள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

பொலிஸ் நிலையங்களில் நிலவும் கான்ஸ்டபிள் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2ஆயிரம் பேரை அடுத்த வாரம் சேர்த்துக்கொள்வதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு அவர் களின் சேவையின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதால் இந்த வெற்றி டங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுபவர் களுக்கு களுத்துறை, நிக்கவரெட்டிய, மாத்தளை, ஹற்றன், அல்பிட்டிய, பகல கம, மொறவேவ ஆகிய பிரதேசங்களி லுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (க-9)

# அடுத்த மாதம் முதல் இலங்கைக்கு கடல்வழித் தொலைத்தொடர்பு வசதி

(மதுரை)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடல்வழி தொலைத்தொடர்பு கேபிள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இருந்து செயல்பட தொடங்கும் என தமிழ்நாடு கேரளாவுக்கான பி.எஸ்.என்.எல் பொது மேலாளர் ஆர்.எம்.சுப்பையா கூறினார்.

பி.எஸ்.என்.எல் டிரான்ஸ்மிஷன் திட்டத் தில் சிறப்பாகப் பணியாற்றிய ஊழியர்க ளுக்கு 'பாரத் சஞ்சார் சாரதி' விருது, 'சஞ்சார் சேவா பதக்கம்' வழங்கும் விழா நேற்று முன்தினம் நடந்தது. எர்ணாகுளம் துணை பொது மேலாளர் தீபு வரவேற்றார். இவ் விழாவுக்கு தலைமை வகித்த சுப்பையா அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தியாவில் தூத்துக்குடியில் இருந்து இலங்கையில் மவுன்ட் லவெனியா என்ற இடத்தில் 332 கி.மீ தூரத்திற்கு கடல் அடி யில் தொலைத்தொடர்பு கேபிள் அமைக் கும் பணி 80 சதவீதம் முடிந்துவிட்டது. அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்த கேபிள் துவக்கி வைக்கப்படும்.

இதனால் பி.எஸ்.என்.எல் இற்கு பல கோடி ரூபாய் மிச்சமாகும். இந்தியாவில் 300 இடங்களில் வை-பீ எனப்படும் வயர் பிரீ தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, புதுச்சேரி மற்றும் கேரளாவில் எர்ணாகுளம் ஆகிய இடங்களில் அறிமுகப் படுத் தப்படவுள்ளது. இங்கெல்லாம் வயர் இணைப்பு இல்லாமல் இன்டர்நெற் பயன் படுத்த முடியும்.

உலகிலேயேமுதன் முதலாக சென் னையில் 'வை- மாக்ஸ்' என்ற அதி நவீன வயர் பிரீ தொழில்நுட்பம் அறிமுகப்படுத் தப்படவுள்ளது. வை-பீ யை விட இதன் மூலம் நீண்ட தூரத்துக்கு வயர் இல்லாமல் இன்டர்நெற்றை பயன்படுத்த முடியும்.

அதிவேக பிராட்பேண்ட், டேட்டா சர்வீஸ், டெலிபோன் இணைப்புகள் தமிழகத்தில் 23 நகரங்களிலும் கேரளாவில் 11 நகரங் களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மதுரை டிரான்ஸ்மிஷன் வட்டத்தில் சென்ற ஆண்டு 2 ஆயிரத்து 200 கி.மீ தூரத்திற்கு ஆப்டிகல் பைபர் (ஏ.எப்.சி) கேபிள்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற இலக்கை மிஞ்சி 2 ஆயிரத்து 304 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன என் றார். (க)

# தலைநகரில் தமிழர் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும்!

## என்கிறார் ஆறுமுகம் தொண்டமான்



(கொழும்பு)

கொழும்பு வாழ் தமிழ்மக்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், அவர்கள் எதிர்நோக்கும் சகல விதமான பிரச்சினைகளுக்கும் ஒரு காத்திரமான தீர்வை ஏற்படுத்தும் நோக்கில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தலைநகரில் தமிழர் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டிய கடப் பாடு, கடமைப்பாடு தலைநகர் வாழ் தமிழ் பேசும் மக்களைச் சார்ந்ததாகும் என்று இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்ட மான் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கை யில் தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ள தாவது;

'தமிழ் பேசும் மக்கள் எந்தெந்த பகுதி யில் வாழ்ந்தாலும் சரி அவர்களை அலைக் கழிக்கும் அனர்த்தங்களுக்கு உரிய தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே இ.தொ.கா. வின் அவாவாகும். இவர்களது பாதுகாப்பு, உரிமைகள் பேணப்பட்டு தனித்துவமாக தலைநிமிர்ந்து வாழும் நிலைக்கு தள்ளப் பட வேண்டும். எனவேதான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அயராது பாடு பட்டு மக்களின் தேவைகளை அவ்வப் போது உணர்ந்து உழைத்து வருகிறது.

ஆகவே தலைநகரில் ஒரு சக்தியாக நமது மக்கள் ஒன்றுபடவேண்டும். இம்மக் களின் விருப்பு வெறுப்புகளையும் உணர்வு களையும் இ.தொ.கா. நன்கு உணர்ந் துள்ளது. அதற்கேற்றவாறு அந்த மக்கள் மீது எழும் பிரச்சினைகளை இ.தொ.கா தட்டிக்கேட்க ஒருபோதும் தயங்காது.

60 வருடங்களுக்கு மேலாக பேரம் பேசும் சக்தியாக விளங்கும் இ.தொ.கா. அரசோடு எச்சந்தர்ப்பத்திலும் இப்பிர தேச மக்களின் நன்மைக்காக பேசவும் வாதாடவும் உறுதி கொண்டுள்ளது.

இந்த உள்ளூராட்சி சபையில் இ.தொ. காவும் மலையக மக்கள் முன்னணியும் கூட்டணியாகச் செயற்பட்டு மலையகம் உள் ளிட்ட ஏனைய பகுதிகளிலும் எமது ஒற் று மையை வெளிக்காட்டும் நோக்கில் களம் இறங்கியுள்ளது.

எனவே இந்தத் தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்கு மண்வெட்டி சின்னத்தில் போட்டியிடுகிறது. இதனை கொழும்புவாழ் மக்கள் தமது கருத்தில் கொண்டு இ.தொ.கா. சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களான திருக்கேஸ் செல்லசாமி, கே.ரி. பாலசந்திரன், இராஜேந்திரன் பெர்னாண்டோ, தயாளன், சுடலை கோவிந்தராஜ், எம்.எஸ். சிவகுமார், பைசால் ஆகியோரை வெற்றிபெறச்செய்வது கொழும்பு வாழ் தமிழ் மக்களின் கரங்களில் தங்கியுள்ளது.

எனவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர் தலில் எம்மவர்களை மாநகரசபையில் அடை யாளப்படுத்தும் வாய்ப்பையும் வெற்றியை யும் நிரூபித்துக் காட்டுவது கொழும்பு வாழ் தமிழ் மக்களிடமே தங்கியுள்ளது. (க)

# அனுமதி அட்டை விநியோகம்

க. பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற வுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் துரிதகதியில் விநி யோகிக்கப்பட்டு வருகின்றன.

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அவ்வப் பகுதியிலுள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரி விக்கப்படுகிறது. (து-132,133)

# இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படும் அடித்துக் கூறுகிறார் கொட்டகதெனிய

இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற் படும் என அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதி யின் ஆலோசகரும் ஹெல உறுமயவின் முக்கியஸ்தருமான முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனிய.

அவர் ஊடகம் ஒன்றுக்கு இதுபற்றி தெரி விக்கையில்,

மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் விடுத லைப்புலிகளுக்கு கிடைத்துள்ள நிலப்ப ரப்பை மீண்டும் கைப்பற்ற முடியும். பயங் கரவாதத்தை ஒழிக்காமல் சமாதானத்தை உருவாக்க முடியாது.

இதேவேளை நாட்டின் இறையாண்மை யைப் பாதுகாக்க தயாரா? இல்லையா? என்பதனை நாட்டின் அரசியல் தலைவர் கள் விரைவில் தீர்மானிக்க வேண்டும்.

இந்த நிலைமையில் போர் ஏற்பட்டால் இருதரப்பும் அதில் வெற்றிபெற முடியாது.

ஆனால் 3 ஆயிரம் ஆண்டுகள் நாட் டைப் பாதுகாத்து நாட்டை நேசிக்கும் சிங்கள மக்கள் நினைத்தால் விடுதலைப்புலிகளை தோற்கடிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத் தப்பட்டு வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற் பகல் 10.30 மணியளவில் பெரியபுராணம் தொடரில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமார வேல் அன்மீகச் சொற்பொழிவாற்றுவார். (க-35)

# கைது செய்ய உத்தரவு

(மன்னார்)

மன்னார் முருங்கனில் பணியாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் சாந்த பிரேமகுமார் (வயது - 41) என்பவரை படுகொலை செய் தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவரை கைதுசெய்ய மன்னார் நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார்.

மது அருந்திக் கொண்டிருந்த போது நடந்த வாய்த்தகராறில் சார்ஜன்ட் எம். எம்.ரக பிஸ்டலால் தலையில் பொலிஸ் பொறுப்பதிகாரி சுட்டுப் படுகொலை செய் துள்ளார்.

சார்ஜன்ட் படுகொலை செய்யப்பட்ட சம்பவ இடத்தை நீதிபதி பார்வையிட்டார்.

படுகொலை செய்த பொலிஸ் அதிகாரியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவும் அவர் உத்தரவிட்டார். (க)

# அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட அரச சார்பற்ற நிறுவ னங்களின் இணையத்தின் அவசர கூட் டம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இணையத்தின் தலைவர் எம்.கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.குடாநாட்டில் இடம் பெறும் தற்போதைய நிலவரம் குறித்து ஆராயப்படவுள்ளதால் அங்கத்துவ நிறு வனங்களை தவறாது கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (க-9)

# கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை திருகோமரம் கடவெல பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள மெத வாச்சிய இராஜமகா விகாரை மீது நேற்று முன்தினமிரவு 11.00 மணியளவில் கைக் குண்டு வீசப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைக்குண்டு வெடிக்காத நிலையில் அதனை மீட்டு குண்டு செயலிழக்கும் பிரிவினரின் உதவியுடன் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல விகாரைகளுக்கும் பாதுகாப்பை வழங்குமாறு கிழக்கு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் அபயவர்த்தன சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். (க-9)

# அல்லைப்பிட்டிப் படுகொலைகளுடன் ஈ.பி.டி.பி,கடற்படையினருக்கு தொடர்பு?

## சர்வதேச மன்னிப்புச் சபை சந்தேகம்

(கொழும்பு)

அல்லைப்பிட்டிப் படுகொலை நடந்த இடத்தில் கடற்படையினர் மற் றும் ஈ.பி.டி.பியினர் இருந்ததாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்தக் கொலைகள் இலங்கைக் கடற்படையினரின் கைவரிசையே என்று புலிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால் கடற்படையினரோ இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருக்கிறார்கள் .

இருந்தாலும் இந்தக் கொலைகள் நடந்த போது அங்கே இலங்கை கடற்படையினரும் ஈ.பி.டி.பி. என்ற தமிழ் அரசியல் கட்சி ஒன்றுடன் சேர்ந்து இயங்கும் ஆயு தக்குழு வின் உறுப்பினர்களும் பிரசன்னமாகி இருந்திருக்கிறார்கள் என்பதற்கான நம்பகரமான அறிக்கைகள் எமக்குக் கிடைத் திருக்கின்றன.

குறைந்த சுருதியில் முன்னெடுக்கப்படும் ஆயுத மோதல்கள் பெரும் யுத்தமாக மூளும் என்ற அச்சத்துக்கு மத்தியில் பொதுமக்களை கொலை செய்வது பெருகி வருவது கண்டு நாம் பேரதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறோம்.

கடந்த மாதம் மட்டும் 200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் பெரும்பாலானோர் பொது மக்களே. இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்திருக்கிறார்கள். யுத்த நிறுத்த உடன்படிக்கை முறிந்து இடிந்து விழுந்து முழு அளவிலான ஆயுதமோதல்கள் தொடங்குமானல் பொது மக் கள் பாராதூரமான கொடிய விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என அஞ்சுகிறோம்.

கடந்த வார இறுதியில் அதாவது மே13,14ஆம் திகதிகளில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில் 18 சிவிலியன்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 13 பேர் தமிழ் குடிமக்கள். வடக்கே இலங்கை கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஊர்காவற்றுறை என்ற தீபகற்பத்தில் இரு வெவ்வேறு இடங்களில் வைத்து இவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கைக் கடற்படையினரின் பெரிய தளமும் இப்பகுதியிலேயே இருக்கிறது. மே 13ஆம் திகதி இரவு 8.30 மணி யளவில் அல்லைப்பிட்டியிலுள்ள செல்லத்துரை அமலதாஸன் என்பவரின் வீட்டுக்கு இனந்தெரியாத ஆயுதபாணிகள் பிரவேசித்து அங்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள். இறந்தோரின் 4 மாதக் குழந்தை ஒன்றும் 4 வயது சிறுவன் ஒருவனும் உள்ளடங்குவர். காயமடைந்த மற்றொருவர் மருத்துவமனையில் இறந்துள்ளார்.

இதேவேளை, இரவு 10.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுதபாணிகள் இதே பகுதியில் உள்ள புளியங்கூடலில் 72 வயதான முருகேசு சண்முகலிங்கம் என்பவரின் வீட்டுக்குள் பிரவேசித்து அவரையும் அவரது குடும்பத்தினர் இருவரையும் சுட்டுக்கொன்றுள்ளனர்.

புளியங்கூடலில் 10கடைகள் தீ மூட்டிஎரிக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. அருகில் உள்ள வங்களாவடி என்ற இடத்தில் தேநீர்கடை ஒன்றின் உரிமையாள ரான ரத்தினம் செந்தூரன் என்பவரது வீட்டுக்குள் பிரவேசித்த ஆயுதபாணிகள் அவரைச்சுட்டுக்கொன்றுள்ளனர். இவரது குடும்பத்தினரும் சுடப்பட்டனர். ஆனால் அவர்கள் காயங்களுடன் உயிர் தப்பி விட்டனர்.

தீவுப்பகுதியில் நடந்த இந்தக்கொலைகளை அரசு கண்டித்திருக்கிறது பொலிஸ் விசாரணைகள் நடைபெறுகின்றன. எனவும் அரசு அறிவித்துள்ளது.

அரசு எடுத்துள்ள இந்த ஆரம்ப முயற்சியை சர்வதேச மன்னிப்புச்சபை வரவேற்கிறது. ஆனால் அதே நேரம் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பான அரசின் முன்னைய விசாரணைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல் இருக்கும் ஒரு அவல நிலை உள்ளதை அவதானிக்க முடிகிறது. இது பெரும் குழப்பத்தை தருவதாகவும் உள்ளது. ஒரு சில விசாரணைகள் தீவிரமாக இருப்பதில்லை.

விசாரணைகளில் தீவிரமாகவும் ஸ்திரமாகவும் நடந்தால் மட்டுமே கொலைகளில் சம்பந்தப்பட்டோரை சட்டத்தின் முன் கொண்டுவரமுடியும். இல்லையேல் இது போன்ற கொலைகள் தொடர்வதற்கு இடமளித்த தாகவே ஆகிவிடும்.

சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தின் படி நாட்டில் நடைபெறும் சகல ஆட்கொலைகள் தொடர்பாக அரசு சுதந்திரமாகவும் , தீவிரமான முறையிலும் விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டோரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளது. விசாரணைகள் பற்றிய அறிக்கையை அரசு மக்கள் பார்வைக்கு பகிரங்கப்படுத்தவும் வேண்டும்.

கொலைகள் தொடர்பாக தீவிரமான விசாரணைகள் மேற்கொள்ளாமலும் சம்பந்தப்பட்டோருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யாமலும் இருந்தால் வன்முறைக்கு வன்முறை என்ற ரீதியில் பதிலடிப் படலம் தொடரவே செய்யும்.

அது தொடர்வதும், அதனால் சிவிலியன்களின் உயிர்கள் பேராபத்துக்குள்ளாவதும் தொடர்ந்து பெருகிக் கொண்டே இருக்கும்.

ஊர்காவற்றுறையில் நடந்த கொலைகளுக்கான சூத்திரதாரிகள் இலங்கை கடற்படையினரே என்று விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் கடற்படையினரோ கொலைச் சம்பவங்கள் நடைபெற்ற பொழுது சம்பவ இடத்தில் இலங்கை கடற்படையினரும் ஈ.பி.டி.பி கட்சியுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவினரும் பிரசன்னமாகி இருந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் நம்பகமான அறிக்கைகள் எமக்குக் கிடைத்திருக் கின்ற ன.

சர்வதேச அபிப்பிராயத்தை திசை திருப்புவதற்காக விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று அரசு தெரிவித்திருக்கிறது.

இந்தத் தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு என்பது ஒரு புறமிருக்க சர்வதேச சட்டங்களின் படி இலங்கை அரசுக்கு ஒரு கடப்பாடு இருக்கிறது. அதாவது இது போன்ற கொலைகள் மீண்டும் தலைதூக்காது இருப்பதைத் தடுப்பதற்கானநடவடிக்கை எடுப்பது கொலைகளில் சம்பந்தப்படுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்துவது –கொல்லப்பட்டோரின் குடும்பத்தினருக்குரிய நிவாரணங்கள் கிடைப்பதற்கு உதவுவது என்பனவே இந்தக் கடப்பாடாகும்.

இதனை ஒப்பேற்றுவதற்குரிய சகலதையும் அரசு செய்யவேண்டும். இதோபோல பிரச்சினையில் சம்பந்தப்பட் டசகலரும் சிவிலியன்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதைத் தடுப்பதற்கு ஒன்றுபட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (கு–9)

# இன்று ஒரு தகவல்

## துறவு

ஒரு ஊரில் ஒரு வைரவியாபாரி இருந்தார். அவருக்கு ஒரு மனைவி இருந்தார். குழந்தை குட்டி எதுவும் கிடையாது. அவர்களிருவருக்குமே மிகவும் தாராள மனம் இருக்கும். செல்வத்தையெல்லாம் வாரி வாரி வழங்கினார்கள். அப்படியும் முழுமையான மன நிறைவு, மன அமைதி கிடைக்கவில்லை.

அவர் ஒரு நாள் தன் மனைவியிடம் சொன்னார். “இதோ பார்... நான் ஒரு பரதேசியாகி இந்த ஊரை விட்டே வெளியேறப்போகிறேன் அதற்கு முன்பு இருக்கும் சொத்தை தானதர்மம் செய்யப்போகிறேன். அதனால் உனக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் முதலில் நீ எடுத்துக்கொள்” என்றார். மனைவி சொன்னார் “நீங்கள் போனபின் எனக்கு மட்டும் என்ன இருக்கிறது? பிள்ளையா.... குட்டியா நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன்.” என்றார் “உன்னால் ஊர் சுற்ற முடியாது. காடு மேடெல்லாம் அலைய முடியாது. பசி பட்டினி, குளிர் வெயில் எல்லாவற்றுக்கும் ஈடுகொடுக்க வேண்டியிருக்கும் அதனால் உனக்கு இது வேண்டாம் என்றார்.

ஆனால் மனைவி பிடிவாதமாக நான் வந்தே தீருவேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். வேறு வழியில்லாமல் மனைவியையும் அழைத்துக்கொண்டு அவர் புறப்பட்டார். அதற்கு முன் இருப்பதையெல்லாம் வாரி வழங்கினார்கள். கடைசியாகக் கழுத்தில் கிடந்த நகைகளையும் கழற்றினார் மனைவி. “என்ன இது தாலியையும் கழற்றுகிறாய் நமது திருமணத்திற்கு அடையாளமே அதுதானே” என்றார் இவர். “எப்போது நாம் துறவு வாழ்க்கையை தொடங்கினோமோ அப்போதே கணவன் மனைவி என்ற பந்தமெல்லாம் போய்விட்டது. இனிமேல் நீங்கள் வேறு நான்வேறு இருந்தாலும் நாம் இப்போது ஒன்றாகச் சேர்ந்து போவது எதற்கென்றால் ஒருவருக்கொருவர் உதவியாகத்தான் கழுத்தில் ஒரு சங்கிலி கிடந்தால் கஷ்டம் வரும்போது அதை விற்றுக் காசாக்கிக்கொள்ளலாமே என்ற எண்ணம் வரும்...அதனால் அது வேண்டாம்”என்றார் மனைவி.

அதன்பின் அவர்களிருவரும் பல ஊர்சுற்றினார்கள். வெயில் மழை.... பசிபட்டினி அவருக்கு அந்த அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இவ்வளவு கஷ்டத்திற்கும் ஈடுகொடுக்கின்றாளே என்று ஆச்சரியமாக இருந்தது. “நீ ஊருக்குத் திரும்பிப் போய்விடேன்” என்றும் கூறிப் பார்த்தார். சுவாமி நீர் இப்போது என் கணவரல்ல உம் பேச்சை யாம் கேட்பதற்கு என்றார்.

இப்படியே கொஞ்சக் காலம் போனது. ஒரு நாள் அவர்களிருவரும் ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு பெரிய மாணிக்கக் கல் கிடந்தது. முன்னால் போய்க்கொண்டிருந்த அவர் அதைப் பார்த்துவிட்டார். பின்னால் வந்துகொண்டிருக்கும் தன்னுடைய மனைவியின் கண்ணில் இது பட்டுவிட்டால் மறுபடியும் உலக ஆசை வந்து சந்நியாசத்தை விட்டாலும் விட்டுவிடுவாள் என்று நினைத்து அதைக் காலால் மிதித்து மறைத்துக்கொண்டார்.

பின்னால் வந்த அந்த அம்மா... “அது என்ன சுவாமி காலால் மிதித்துக்கொண்டிருக்கிறீகள்?” என்று கேட்டார். “இது.... இது.... வந்து மாணிக்கக்கல்! இதைப்பார்த்து உனக்கு உலக ஆசைகள் வந்து மனம் மாறிப்போய் விடுமோ” என்று பயந்துதான் இதைமறைத்தேன் என்றார் அவர். இதற்கு அந்த அம்மா “சுவாமி! தங்களுக்கு இன்னமும் மாணிக்கத்திற்கும் மண்ணாங்கட்டிக்கும் வித்தியாசம் தெரிகிறதா? எனக்கு இரண்டும் ஒன்றாய்த்தான் தெரிகிறது” என்றாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. துறவு என்பது அவ்வளவு சாதாரண சமாச்சாரமில்லை.

இந்தக் காலத்து ஆசாமி ஒருவர் “எனக்கென்றிருக்கும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறேன்”என்றார். “உனக்கென்றிருப்பது எவ்வளவு?” என்றேன். “எல்லாவற்றையும் கூட்டிப்பார்த்தால் மொத்தம் 50,000 தேறும்” என்றார். “என்ன... சொத்தா?” என்று கேட்டேன். ‘இல்லை கடன்’ என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விழிப்பூட்டல் கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெரியபோரதீவு ஊரக மேம்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான விழிப் பூட்டல் கலந்துரையாடல் பெரியபோரதீவு காளி கோயில் முன்றலில் நடை பெற்றது.

பெரியபோரதீவூஊரக மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்தயாமோகன், பட்டிருப்பு கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் செல்வா ஆகியோர் இன்றைய சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

இதில் 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் போரதீவு, பட்டாபுரம் போன்ற கிராமங்களிலிருந்து கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

## அனுமதி அட்டைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று வழங்கப்பட்டது. (கு–132,133)

## இலங்கையில் அடுத்த வாரம் முதல் தென்மேற்கு பருவக்காற்று மழை

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த வாரம் முதல் தென்மேற்குப் பருவக்காற்று மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் சப்பிரமுகவ மத்திய மாகாணத்தின் மேற்கு மலைப்பகுதிகளிலும் காலி, மாத்தளை மாவட்டங்களிலும் எதிர்வரும் 3 வார காலப்பகுதிக்குள் மழையுடன் கூடிய காலநிலை நிலவக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் வெள்ளம் அல்லது மண்சரிவு ஏற்படக் கூடுமென வளிமண்டலத்திணைக்களம் எச்சரித்துள் ளது. இதேவேளை, வடமேல், தென் சப்பிரகமுவ மகாணங்களிலும் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (கு–9)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி இருவர் காயமடைந்தனர்

(புத்தளம்)

புத்தளம் , கல்லடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்த இனந்தெரியாத நபர் ஒருவர் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒருவர் மரணமடைந்ததுடன் இருவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இராணுவத்தில் இருந்து தப்பியோடியவரே இத்துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் என தெரியவருகின்றது.

இதேவேளை, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டபொலிஸார் தனிப்பட்டதாகராறு காரணமாகவே இச்சம்பவம் நடந்ததாக கூறினர். (கு–15ஏ.)

## ஐ.தே. க. எச்சரிக்கை ஸ்ரீ.சு.க.கடும் கண்டனம்

அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்தமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திரக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசாங்கத்தின் அமைதி முயற்சிக ளுக்கான ஆதரவை விலக்கிக்கொள்வதாக ஐ.தே.க. வின் பிரதித் தலைவர் கருஜயசூரிய கூறியுள்ளார் அங் கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பொறுப்பான கருத்து அல்ல.

எந்த ஒரு கட்சி உறுப்பினரும் எந்த ஒரு கட்சியி லிந்தும் விலகலாம். அது உள் கட்சி பிரச்சினை. கட்சி உறுப்பினர்கள் விலகினால் அதற்கு ஐ.தே.க.தான் முகம்கொடுக்க வேண்டும். அப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் சிறுபிள்ளைத் தனமான அறிக்கைகளை வெளியிடக் கூடாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 44



### கண்ணற்ற தீவுக்கு

கேப் நகரத்தில் ஏராளமான காவல்துறையினரும் அதிகார உடையில் இல்லாத அதிகாரிகளும் திரண்டிருந்தனர். ஒரு மூடப்பட்ட படகல் சங்கிலிகளோடு ஏற்றினார்கள். மேல் மூடியில் ஒரு துவாரம் மட்டும் இருந்தது. அது வழியாகத்தான பார்க்கலாம். அது வழி யாகத்தான் மேலே உட்கார்ந்திருந்த வார்டர்கள் சிறுநீர் கழித்தன். அது இவர் கள் மீது தெளித்தது. பயணம் சிரமமாக இருந்தது. அலைகளில் படகு மேலும் கீழுமாகத் தள்ளாடியது. கடைசியாகத் தீவுக் கரையை எட்டி னர். அழகான இயற்கைக்காட்சி அது . ஒரு சிறை மாதிரி தோன்றாமல் சுற்றுலா மையம் போல் காட்சி தந்தது. கேப் நகரத்திலிருந்து எட்டாவது மைலில் இருந்த இந்தக் கற்பாறைத் தீவு பற்றி குழந்தையாக இருந்த போதே கேள்விப்பட்டிருந்தார்கள் . 1819 இல் ஆறரை அடி உயரம் இருந்த மக்கானா என்ற சோசா தளபதி கிரகாம் என்ற வெள்ளைத் தளபதியை எதிர்த்துப் பத்தாயிரம் வீரர்களுடன் மோதி சண்டையில் தோற்ற பின் இதே தீவில் அடைக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டிருந்தார் மண்டேலா. 1658இல் வான்ரீபக்கால் சிறைப்படுத்தப்பட்ட ஆஸ்துமாவ் என்பவர் இதே தீவிலிருந்து ஒரு படகில் தப்பியோடிவிட்ட கதையையும் கேட்டிருந்தார்.

ரோபன் என்பது சீல் என்ற கடல் மீன் வகையைச் சேர்ந்தது. இதற்கு டச்சு மொழியில் ரோப எனப்படும். அவை இந்தத் தீவில் கூட்டங் கூட்டமாக இலட்சக் கணக்கில் இருந்து வந்ததால் அதை வைத்தே ரோபன் தீவு என்று பெயராகிவிட்டது!

வெள்ளைக்கார வார்டர்கள் ''ஆகா ... தீவுக்கு வந்து விட்டீர்கள். இங்கே தான் நீங்கள் சாக வேண்டும்'' எனக் கத்தி வரவேற்றனர் . ''இங்கே நான் தான் அதிகாரி. நான் வைத்தது தான் சட்டம் .... புரிகிறதா இல்லையேல்'' என்று உறுமினான் ஒரு வெள்ளையன்.

சிறையை நோக்கி நடந்தபோது இரண்டு இரண்டு பேராக என வார்டர் கத்தினார் . அவர்கள் ஆங்கிலத்தில் பேச மாட்டார்கள். ஆபிரிக்கான் என்ற டச்சு , ஆங்கிலம் ஆபிரிக்க மொழி கலந்து எழுந்த ஒரு மொழியில் தான் பேசுவார்கள்.

டெபுவிடம் , ''இவர்கள் மிரட்டலுக்குப் பணியாமல் நாம் இருவரும் வழி காட்டலாம்'' என்றார் மண் டேலா. இருவரும் முன் வரிசையில் அக்கம்பக்கத்தில் நின்றவாறு மெதுவாக ஆடி அசைந்து ராஜ நடை போடத்தொடங்கினார்கள். இதைக் கண்டு எரிச்சல்பட்ட அதிகாரி முன்னால் ஓடி வந்து இது தீவு. நான் நினைத்தால் கொன்று விடுவிவேன் இங்கே கேட்க நாதியில்லை. ஒழுங்காக சொல்கிறபடி நடந்து கொள்ளுங்கள் என எச்சரித்தான்.

சிறிதும் சலனமில்லாமல் ''நீ உன் வேலையைச் செய்கிறாய் நாங்கள் எங்கள் கடமையைச் செய்கிறோம்'' என்றார் . அதிகாரி அசந்து அமைதியாகிவிட்டான்.

ஓர் அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே கால் நனையத் தண்ணீர் பெருக்கப்பட்டு நின்றது. சரி சட்டைகளைக் கழற்றி விடுங்கள் என்றனர். கழற்றப்பட்ட ஆடைகளைச் சோதித்தார்கள். பிறகு நனைந்த சட்டைகளை அணியச் சொன்னார்கள். ஒரு கைதி நீண்ட தலை முடியுடன் இருந் தார். ''இவ்வளவு நீள முடியுடன் ஏன்வந்தாய்'' என்று கேப் டன் கத்தினான். மண்டேலா சத்தமாக ''எங்கள் முடி எவ்வளவு நீளம் இருக்கவேண்டும் என்பதை சட்ட முறைப்படி...'' என்றார்.

இதைச் சொன்னவுடன் ஒருவன் மண்டேலாவை அடிக்கப் பாய்ந்தான். ஆனால், இன்னொருவன் அவனைப் பிடித்து நிறுத்தி காதுக்குள் ஏதோ சொன்னான். இருவரும் போய் விட்டனர்.

சிறை அறைக்குள் வந்தவன், ''எங்கே உன் டிக்கட்'' என்றான்.பேசாமல் நீட்டினார் மண்டேலா. ''பெயர் என்ன?'' என்றுகேட்டான் . அதில் பார் என்பது போலக் கையை காட்டினார். அவன் உற்றுப் பார்த்துவிட்டு, ''ஐந்தாண்டுகளா? ஐந்தாண்டு இங்கே என்னிடம் இருக்கவேண்டும். இருந்தும் மமதையாக நடக்கிறாயே'' என்றான்.

''ஐந்தாண்டுகளென்ன-ஐம்பதாண்டுகளும் இருப்பேன். ஆனால், உருட்டல்,மிரட்டலுக்குப் பணியமாட்டேன். .. சட்டமுறைப்படி தான் நடப்பேன். புரிகிறதா?'' என்றார் மண்டேலா.

இத்தகைய இடங்களில், நேரங்களில் பயப்படக்கூடாது. அகங்காரம் பிடித்தவர்களிடம் துணிந்து நின்றால், அடங்கி விடுவார்கள்...! அவர் நினைத்தது மாதிரியே அந்த அதிகாரி பேசா மல் நகர்ந்து விட்டான்.

இதைத் தொடர்ந்து லெப்டினன்ட் பிரிட்டோரியஸ் வந்தார். இவர் சோசா மொழியில் சரளமாகப் பேசினார் . அவர் ''உங்களைப் பற்றிய விவரக் குறிப்புக்களைப் பார்த்தேன். எல்லாம் நன்றாகவே இருக்கிறது. இந்த மனிதருடையது மட்டும் மகாமட்டம்...'' என்று ஜோடெபு பக்கம் கையைக் காட்டினார். புறப்படும் முன், ''இதோ இங்கே ஒரு ஜன்னலைத் திறந்து வைக்கிறேன். ஆனால் ,அது வழியாக நீங்கள் யாருடனும் பேசக்கூடாது. மண்டேலா உனக்குத்தான் சொல்கிறேன்'' எனக் கூறிவிட்டு நகர்ந்தார்.

சாப்பிட்டு விட்டு எல்லோரும் தூங்கிவிட்டனர். ஜன்னலில் யாரோ தட்டுவது கேட்டது. ஒரு வெள்ளைக்காரர் தலையை நீட்டி மண்டேலாவை அழைத்தார். அதிகாரி எச்சரித்தது நினைவுக்கு வந்தது. எனவே தயங்கினார்.

மறுபக்கத்திலிருந்து ''நெல்சன் இங்கே வா'' எனப் பெயர் சொல்லி அழைத்தவுடன் மண் டேலா அருகில் போனார். அவர் தான் புளோம்பேண்டனிலிருந்து வந்துள்ள வெள்ளையரும் கருப்பரும் அல்லாத இனத்தவர் என்பதைச் சொல்லி விட்டு வின்னி மண்டேலாவைப் பார்க்க பிரிட் டோரியாவுக்கு வந்து விட்டு ஏமாற்றத்துடன் போய்விட்டதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது'' என்ற செய்தியைச் சொன்னான்.

நீங்கள் புகைப்பது உண்டா? என்றும் கேட்டான் மண்டேலா . ''நான் புகைப்பது இல்லை. ஆனால் என் சகாக்கள் புகைப்பது உண்டு'' என்றார். அவர் கொஞ்சம் புகையிலையும் சிற்றுண்டி துண்டுகளையும் கொடுத்துவிட்டுப் போனார். சிறையில் இது ஒரு பெரிய வரப்பிரசாதம். புகைக்கும் இருவருக்குப் புகையிலையை சமமாகப் பங்கிட்டுக்கொடுத்துவிட்டு சிற்றுண்டியை மற்றவர்கள் பகிர்ந்து கொண்டனர். சிறையில் கிடைத்த விருந்தாக இது இருந்தது.

ரோபன் தீவில் எத்தனை கைதிகள் இருக்கின்றார்கள் என முதலில் தெரியவில்லை. ஆயிரத்திற்கும் அதிகமான ஆபிரிக்கர்கள் அங்கே சிறையிலிருப்பது தெரிந்தது . மற்ற கைதிகள் வேலை செய்வதைப் போல நாங்களும் வேலை செய்கிறோம் என மண்டேலாவும் டெபுவும் கூறியதை அதிகாரி ஏற்றுக்கொண்டு குழாய் பதித்து மண்போட்டு மூட அனுப்பிவைத்தார். நாள் செல்லச் செல்ல அதிகாரி வேலையை வேகமாகச் செய்யுமாறு அதட்டி னான். இவர்களில் மூத்தவர் டெபு கம்யூனிஸ்டுக்கட்சி உறுப்பினர் .சுத்த ஆபிரிக்கக் காங்கிரஸிலும் உறுப்பினர். இவர் ஆசிரியராக இருந்தவர் .டெபு மண்வெட்டியை வைத்துவிட்டு நின்றவாறு வேகமாகப் பேசினார். எங்களுக்கு வேலை செய்யத்தெரியும். எப்படிச் செய்யவேண்டும் என்பது தெரியும். நீ கத்துவதை நிறுத்திக் கொள் என்றார். அவரும் அடங்கிவிட்டார். டச்சு, ஆங்கிலம், ஆபிரிக்கான் ஆகிய எல்லா மொழிகளிலும் டெபு பேசக்கூடியவர்.

(தொடரும்)

# தொடரும் மின் வெட்டினால் மாணவர்களுக்கு சிரமம்

(யாழ்ப்பாணம்)

எந்த விதமான முன்னறிவித்தலுமின்றி இரவு நேரங்களில் மின்சார சபையினால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மின்வெட்டினால் க.பொ. த.உயர்தரப் பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருக் கும் மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

கடந்த சில காலத்துக்கு முன் சுழற்சிமுறையில் மேற்கொள்ளப்பட்ட மின்வெட்டு சமீப காலமாக தினசரி வெட்டாக மாறியுள்ளதாகவும் சில சமயங்களில் சில இடங்களில் இரவு நேரங்களில் இரண்டு தடவைகள் கூட வெட்டப்படுவதாகவும் பாதிக் கப்படும் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

எந்த இடங்களில் எந்த நேரங்களில் மின் வெட்டு அமுல் படுத்தப்படும் என மின்சார சபை முன் கூட்டியே அறிவித்துவிட்டு இதனை மேற்கொண்டால் சிரமங்களை ஓரளவு தவிர்க்கக் கூடியதாக இருக்கு மென்றும் கவலை தெரிவிக்கப்படு கிறது.

க.பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்கள் நலன் கருதி இப் பரீட்சை முடிவடையும் வரையாவது இந்த மின்வெட்டை நிறுத்தினால் அல்லது இரவில் 10மணிக்கு மேல் மேற்கொண்டால் மாணவர்களுக்கு பேருதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (து-132,133)

## சிறார் பாலியல் துன்புறுத்தல் வழக்கு;

# பௌத்த பிக்குவுக்கு 10 ஆண்டு சிறை

(கொழும்பு)

சிறார் பாலியல் துன்புறுத்தல் வழக்கில் சிங்கள பௌத்த பிக்கு ஒருவருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையை கொழும்பு நீதிமன்றம் விதித்துள்ளது.

பெபிலியன சுந்தரதேவி ராஜகம விகாரையின் பிக்கு தலமரம்பே சுதம்மா மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

கடந்த 1999 ஆம் ஆண்டு மே 27 மற்றும் செப்ரெம்பர் 6ஆம் திகதி 13 வயதுச் சிறுவனை பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கியதாக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

ஆனால் நீதிமன்றில் தம் மீதான குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

பௌத்த பிக்கு மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அவருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தும் பாதிக்கப்பட்ட நபருக்கு 15 ஆயிரம் ரூபா நட்ட ஈட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ ஏ.டி.ரட்ணநாயக்க உத்தரவிட்டார். (க)

# இளையோர் அறிவியல் கண்காட்சி





(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு விசுவமடுவில் அமைந்துள்ள இளையோர் அறிவியல் கழகத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களின் இறுதிநாள் கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கண்காட்சி நிகழ்வு தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றன.

கடந்த ஜனவரி மாதம் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் வறிய மாணவர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களை அறிவியல் ரீதியாக வளர்த்தெடுக்கும் நோக்கில் இத் தொழில்நுட்ப பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது.

இலவசப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு இறுதியில் இக்கண்காட்சி நடந்தது. இக் கற்கைநெறியின் நோக்கம் கிராமப்புறங்களிலும் இளையோருக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குதல் ஆகும்.

இங்கு பயிற்றப்படுவோர்கள் வேலைவாய்ப்பை தேடிக்கொள்ளவும், தொழில்நுட்பக் கல்லூரிகளில் மேற்படிப்பைத் தொடரவும் தகுதிபெறுகிறார்கள்.

இக் கற்கை நெறிக்கான நிதிப்பங்களிப்பினை தமிழ் இளையோர் அமைப்பு (TYO) , தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் (SEDOT) என் பன வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)



இந்தியாவின் எதிர்ப்பை தொடர்ந்து பிரஞ்ச் போர்க்கப்பல் கிளமென்சியு இப்போது மேற்கு பிரான்சில் பிரஸ்ட் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### ஜீ-8 நாடுகள் அமைப்பில்

## இந்தோனேசியாவுக்கு தலைமைச் செயலர் பதவி

வளரும் நாடுகள் தங்களுக்குள் அமைத்துள்ள ஜி.8 என்ற புதிய அமைப்பின் தலைமைச் செயலராக இந்தோனேசியா தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் இந்தோனேசியா, துருக்கி, எகிப்து, ஈரான், மலேசியா, நைஜீரியா, வங்க தேசம், பாகிஸ்தான் ஆகியவை உறுப்பு நாடுகளாகும். 1997 ஜூன் 15ஆம் திகதி இந்த அமைப்பு துருக் கியில் உருவாக்கப்பட்டது.

இந்த நாடுகள் தங்களுக்குள் பல்வேறு அரசியல் பொருளாதார உடன்படிக்கைகளைச் செய்துகொண்டுள்ளன. ஆனால் அவற்றை அமுல்செய்வதிலும் மேற் கொண்டு விரிவுபடுத்துவதிலும் சிக்கல்கள் தொடர்கின்றன.

எனவே இந்த அமைப்புக்காகவே தனி நிர்வாகக் கூட்டமைப்பு அவசியம் என்று உறுப்பு நாடுகள் உணர்ந்துள்ளன. இந்த அமைப்பின் அடுத்த உச்சிமாநாடு மலேசியாவில் 2008ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கிறது. (க)

## பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அடுத்த ஆண்டு ராஜினாமா?

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அடுத்த ஆண்டு தமது அதிபர் பதவியை ராஜினாமா செய்யக்கூடும் என்றும் தற்போதைய நாடாளுமன்றம் மூலமே அவர் மீண்டும் 5 ஆண்டுகளுக்கு அதிபராக தேர்ந்தெடுக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

இது தொடர்பாக முன்னாள் சட்ட அமைச்சரும் அரசியலமைப்புச் சட்ட நிபுணருமான எஸ்.எம்.ஜாபார் பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் தினசரி ஒன்றுக்கு அளித்துள்ளபேட்டியில்,

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் பதவிக்காலம் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி வரை உள்ளது. மீண்டும் அதிபராகப் போட்டியிட அவர் விரும்பினால் பதவிக்காலம் முடியும் முன்னரே தமது பதவியை அவர் ராஜினாமாச் செய்துவிட்டு போட்டியிடலாம். மேலும் தற் போதைய நாடாளுமன்றம் மற்றும் மாகாண அசெம்பிளிகள் மூலமே அவர் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

முஷாரப்பை மீண்டும் அதிபராக தேர்ந்தெடுக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் உரிய காலத்துக்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்படாமல் இருக்க வேண்டும். அதிபர் பதவியை முஷாரப் ராஜினாமாச் செய்தாலும் அவர் தொடர்ந்து முப்படைகளின் தலைவராக இருப்பார். அதிபராக இருக் கும் முஷாரப் முப்படைத்தலைவர் பதவியையும் வகிக்க அந்த நாட்டின் உச்ச நீதி மன்றம் ஏற்க னவே ஒப்புதல் அளித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிந்து அதன் பின் பொதுத் தேர்தல் நடைபெற்றால் மீண்டும் அதிபராக முடியுமா என்ற சந்தேகம் முஷாரப்பிடம் உள்ளது. எனவே நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் முன்னரே அதிபர் பதவிக்கு போட்டியிட்டு மீண்டும் 5 ஆண்டு பதவியில் நீடிக்க முஷாரப் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

முன்னாள் பிரதமர்களான பெநசீர் பூட்டோ, நவாஸ்ஹெரீப் இருவரும் கூட்டாக ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் பேரில் பொதுத் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் முன்னரே மீண்டும் அதிபராக முஷாரப் திட்டமிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்திலிருந்து ஒருவேளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்துவிட்டால் என்ன செய்வது? என்று ஜாபரிடம் கேட்டதற்கு அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் தேர்தல் முடிந்து புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்படும் வரை முஷாரப்பே அதிபராகப் பதவியில் நீடித்திருக்க முடியும். அதாவது அவரது பதவிக்காலம் முடிந்தாலும் கூட புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அவர் தொடர்ந்து அதிபராக இருக்க முடியும் என்று ஜாபர் கூறுகிறார். (க)

## ரஷ்யாவில் தாக்குதல் அமைச்சர் மரணம்

ரஷ்யாவில்தீவிரவாதிகளின்தற்கொலைப் படைத்தாக்குதலில் இங்குஷேசியா மாகாண உள்துறை துணை அமைச்சர் ஸாப்ரெய்ல் கோஸ்டோயெவ் கொல்லப்பட்டார். அவரின் பாதுகாவலர்கள் இருவர் மற்றும் பொது மக்கள் நான்கு பேரும் பலியாயினர். ரஷ்யாவில் செசன்யாவை ஒட்டிய மாகாணம் இன்குஷேசியா. இங்கு பொலிஸ் துறையை கவனித்து வரும் துணை அமைச்சரை குறிவைத்து நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தினர். நாசிர்–கோர்டோவ்ஸ்கி மாவட்டத் தில் நேற்று முன்தினம் காலை காரில் சென்று கொண்டிருந்த போது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளுடன் கார் ஒன்று அமைச்சர் கார் மீது மோதி வெடித்ததில் அமைச்சரும் அவரின் பாதுகாவலர்கள் இருவரும் இறந்தனர். பொது மக்கள் நான்கு பேரும் பலியாயினர். (க)

## சென்னையில் மீண்டும் ஒரு 'டிவி' நடிகை தற்கொலை

சென்னையில் நேற்று முன்தினம் மீண்டும் ஒரு டிவி நடிகை தற்கொலை செய்துகொண்டார். டிவி நடிகைகள் தற்கொலை செய்துகொள்ளும் போக்கு அதிகரித்துள்ளதால் இதற்கான காரணம் என்ன என்பது குறித்து விரிவான விசாரணை நடத்த பொதுமக்கள் தரப்பில் இருந்து கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சென்னை அடையாறு கோட்டூர்புரம் நான்காவது மெயின் ரோட்டில் வர்டேல் அபார்ட்மென்ட் உள்ளது. அதில் மூன்றாவது மாடியில் வசிப்பவர் விஸ்வநாதன். டிசைனிங் கன்சல்டிங் துறையில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி சுமித்ரா கார்மென்ட் துறையில் பணியாற்றி வருகிறார்.

இவர்களுக்கு ஷ்ரதா, ஸ்ரேயா என்ற மகள்கள் உள்ளனர். இதில் ஷ்ரதா பிஎஸ்சி. மைக்ரோ பயோலஜி முடித்து மேற்படிப்பு படித்து வருகிறார். கோலங்கள் என்ற டிவி தொடரில் ஆதி என்பவரது தங்கைகளில் ஒருவராக அதிகமாக வாய்பேசும் துடுக்கான பெண்ணாகவும் நடித்துள்ளார். இதைத் தவிர கல்கி என்ற தொடரில் நடிகை குஷ்புவுக்கு எதிரியாக நடித்துள்ளார்.

ஒன்பதாம் வகுப்பு படித்துவரும் ஷ்ரதாவின் தங்கை ஸ்ரேயா தற்போது பள்ளி விடுமுறை என்பதால் கொல்கத்தாவில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஷ்ரதா பெற்றோரிடம் பேசிவிட்டு இரவு 11 மணிக்கு படுக்கச்சென்றவர் நேற்று முன்தினம் காலை அறையிலிருந்து வெளியில் வரவில்லை. சந்தேகமடைந்த தாய் சுமித்ரா காலை 6 மணிக்கு அறையின் ஜன்னல் கதவு வழியாக உள்ளே பார்த்துள்ளார். அப்போது மின்விசிறி மாட்டியிருந்த கொக்கியில் நைலோன் சேலையால் தூக்கிட்டு ஷ்ரதா உடல் தொங்கிக்கொண்டிருந்தது.

நடிகைஷ்ரதாதூக்கில்தொங்கியஅறையை பொலிஸார் சோதனையிட்டனர். பெற்றோருக்கு ஷ்ரதா கைப்பட ஆங்கிலத்தில் எழுதிய ஒரு பக்க கடிதம் கிடைத்தது. அதில்



நான் உங்களுக்கு மகளாகவே பிறந்திருக்கக்கூடாது. உங்களுக்கு எவ்வளவோ தொந்தரவு கொடுத்திருக்கிறேன்.

இந்த முடிவெடுத்த என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் பெண்ணாக நான் வாழ விரும்பவில்லை. என் சாவுக்கு யாரும் காரணமில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஷ்ரதாவின் கழுத்தை இறுக்கியிருந்த நைலோன் சேலை, அவர் எழுதிய கடிதம், மொபைல் போன் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர். முன் கோபம் அதிகம்கொண்ட ஷ்ரதா அவரது பெற்றோர் கண்டித்ததால் இந்த முடிவை எடுத்தாரா அல்லது காதல் விவகாரம் காரணமா என்ற கோணத்தில் பொலிஸ் விசாரணை தொடர்கிறது. (க)

## வெற்றி தோல்வி இயல்பு துணிச்சலோடு இருங்கள்

### தொண்டர்களுக்கு ஜெயலலிதா அறிவுரை

(சென்னை)

தேர்தலில் அதிமுக தோல்வி அடைந்ததையடுத்து உயிரிழந்த அக்கட்சித் தொண்டர்களின் எண்ணிக்கை 32ஆக உயர்ந்துள்ளது. கவலைக்கு மருந்து தற்கொலை அல்ல துணிச்சல் தான் என்று தொண்டர்களுக்கு அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவுரை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், அதிமுக மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் வெற்றிவாய்ப்பை இழந்தது குறித்த கவலையில் இதுவரை 32 பேர் இறந்துள்ளனர். இதனால் துயரமும் மிகுந்த மனவேதனையும் அடைகிறேன். தோல்வியைத்தாங்கமுடியாமல்தற்கொலை செய்து கொண்டோர் மற்றும் அதிர்ச்சியால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

எத்தனை கவலைகள் இருந்தாலும் தற்கொலை செய்துகொள்வது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. தற்கொலை செய்துகொள்வோர் தங்களைச் சார்ந்திருக்கும் குடும்பத்தினரை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதிமுக கண்விழித்தது முதல் இன்று வரை சோதனைகளை எதிர்கொண்டு அவற்றைச் சுக்கு நூறாக்கி வரலாறு படைத்திருக்கிறது. சோதனைகளும் போராட்டங்களும் நமக்குப் புதியவை அல்ல. அவற்றை இதுவரை வென்ற நாம் இனியும் நிச்சயம் வெல்வோம்.

தேர்தலில் வெற்றி தோல்வி என்பது இயல்பு. ஆனால் இத் தேர்தல் முடிவைப் பொறுத்தவரையில் நாம் தோல்வி அடையவில்லை என்பதே உண்மை. நாம் தனித்து இல்லை. இன்று மக்கள் நம்முடனேயே உள்ளனர். உறுதியோடு பணியாற்றுங் கள் நம்பிக்கையோடு செயல்படுங்கள் என்றுள்ளது. (க)





ஜெர்மன் தலைநகர் பெர்லினில் நடைபெறும் சர்வதேச விமான கண்காட்சியில் புதிய ஏர்பஸ் ஏ380 விமானம் தான் அனைவரையும் கவர்ந்தது.

எவ்வளவு கற்றவராயினும் எவ்வளவு நிரம்பிய அறிவு படைத்தவராயினும் பிறர் சொல்லும் அறிவுரையை சிந்தித்தல் நலம் தரும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

## உயர்தரப் பரீட்சைக்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை

எதிர்வரும் 22-ம் திகதி கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. நாடளாவிய ரீதியில் நடைபெற இருக்கும் இப் பரீட்சை கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றிருக்கவேண்டும்.

இருந்தும் உள்ளூராட்சி தேர்தல் காரணமாக பரீட்சை மே மாதம் 22-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனினும் வடக்கு கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள கள நிலைமை பரீட்சை நடைபெறுமா? பரீட்சையை செம்மையாக நடத்த முடியுமா என்பது போன்ற பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

இக் குழுப்ப நிலையின் மத்தியில் உயர்தரப்பரீட்சையை மே 22-ம் திகதி வடக்கு கிழக்கில் நடைபெறா விட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மாணவர்களே.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் பரீட்சை எழுதுவதற்குரிய சூழ்நிலை இல்லாதபோதிலும் அந்தப்பரீட்சைகளை அரசு நடத்தியிருந்தது.

இதனால் வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பரீட்சை எழுதமுடியாத பரிதாப நிலைக்கு தள்ளப்பட னர். எனவே எதிர்வரும் மே மாதம் 22-ம் திகதி நடை பெறவிருக்கும் உயர்தரப் பரீட்சை வடக்கு கிழக்கில் நடைபெறாவிட்டால் அரசு பரீட்சையை ஒத்திவைக்கப் போவதில்லை.அதேநேரம் வடக்கு கிழக்கிற்குத் தனியாக விசேட பரீட்சை நடத்தப்போவதும் இல்லை.

இந் நிலையில் உயர் தரப்பரீட்சையில் தமிழ் மாணவர்கள் தோற்றுவதற்கான வசதிகளையும் பரீட்சைகள் குழப்பமின்றி நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் உரிய அதிகாரிகள் செய்தாக வேண்டும்.

அதே நேரம் பரீட்சை ஒழுங்காக நடைபெறுவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். குறிப்பாக ஆயுதம் தரித்தவாறு வீதியெங்கும் காத்திருக்கும் படையினர் நடத்தும் சோதனை நடவடிக்கைகள் பரீட்சை எழுதும் மாணவர்களை எவ்வகையிலும் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகளுக்கு அருகாமையில் காவல் பணியில் ஈடுபடுவது அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்வது போன்ற நிகழ்வுகள் மாணவர்களின் மனக்குழப்பத்திற்கு காரணமாக அமையக்கூடியது.

இத்தகையதோர் மனக்குழப்பநிலையில் பரீட்சையை ஒழுங்காக எழுத முடியாது என்ற உண்மையை உணர்ந்து படைத்தளபதிகள் உரிய ஏற்பாடுகளை செய்வது கட்டாயமானதாகும்.

# தமிழருக்கு சவக்கிடங்கு வெட்டியது ஐ.தே.கட்சி! சமாதானக் கதவுகளை மூடியது மஹிந்த அரசு!!

## இடது சாரிகளை ஆதரிக்க கோருகிறார் கருணாரட்ண

(கொழும்பு)

**இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்குப் பெரிய சவக்கிடங்கை வெட்டிவிட்ட கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். அதேவேளை,பேச்சுக்கான கதவுகளை மூடிவிட்டிருக்கிறது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய அரசு. எனவே இந்தப் பிரதான கட்சிகளை மக்கள் நிராகரித்து இடதுசாரிகளை ஆதரித்து எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கவேண்டும் இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண.**

கடந்த 14 ஆம் திகதி கொழும்பு கொம்பனித் தெருப் பகுதியில் இடம்பெற்ற ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

"மஹிந்த சிந்தனை" அராஜகத்தின் வெளிப்பாடாகவே காணப்படுகிறது. பேச்சுக் கதவுகளை இன்றைய அரசு மூடியுள்ளது. அதேநேரம் பேரினவாத கருத்தியல் பாதுகாப் புப் பிரிவினுள் செல்வாக்கு செலுத்தும் நிலை தோன்றியுள் ளது. இதன் காரணமாகவே வடக்கு-கிழக்குப் பகுதிகளில் எங்கும் மனிதப் படுகொலைகள் தொடர்கின்றன.

ஜனாதிபதி தற்போதும்கூட பேரினவாதிகளைத் திருப்தி செய்யும் விதத்திலேயே செயற்படுகின்றார். அயல் நாடான இந்தியா இந்த அநியாயங்களைப் பார்த்துச் கொண்டு சும்மா இருக்கமுடியாது.

தமிழ் மக்களுக்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவ வேண்டும். அதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

எமது இடதுசாரி அணி பலம் பெறுவதன் மூலம் இத்தகைய நிலை உருவாகும் சந்தர்ப்பம் உண்டு.

இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்குப் பெரிய சவக்கிடங்கை வெட்டிய கட்சி ஐக்கிய தேசியக்கட்சி ஆகும். இன்று இக் கட்சியின் தலைவர் நாட்டில் இல்லை. வடக்கு- கிழக்கிலே இவ்வளவு மனித உயிர்கள் பறிக்கப்பட்டிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சி மஹிந்த அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்குவோம் என்று குரல் கொடுத்துள்ளதோடு இராணுவத்தின் செயற்பாட்டுக்குப் பாராட்டும் தெரிவித்துள்ளது.

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் பல்வேறு நிறுவனங்களினதும் செயற்பாட்டை நிறுத்துவோம் எனக் கூறி வந்த ஜே.வி.பி. அதைப்பற்றி எதுவித கவலையுமின்றி இனவாதத்தை மட்டும் பேசி வருகிறது. நாட்டின் வளங்கள் விற்கப்படுகின்றன.

தனியார் மயமாக்கல் தொடர்கின்றது. சுற்றுப்புறச் சூழலுக் கு அச்சுறுத்தல் தரும் நிலை பல்வேறு பகுதிகளிலும் உருவாக்கப்பட்டுள்ளது. நானும் தோழர் திருநாவுக்கரசுவும் கொழும்பு மாநகரசபையில் அங்கத்தவர்களாகவிருந்த காலத் தில் எம்மாலான சேவைகளை அனைத்து மக்களுக்கும் செய் தோம். தமிழ் மொழிப்பாவனையைக் கொழும்பு மாநகரசபையில் நடைமுறைக்குக் கொண்டுவந்தோம். கொழும்பு மாநகர நிர்வாகம் மறந்து இருந்த பல இடங்களை அபிவிருத்தி செய்தோம்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எம்மைப்போன்ற இடதுசாரி சக்திகள் வெற்றி பெறுவதன் மூலமேதமிழ்மக்களுக்கு ஒரு தீர்வைவழங்கும்நிலையை உருவாக்க முடியும்

இன்றைய காலகட்டத்தில் போராட்டங்களேதமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்தின் கண்களைத் திறக்க வைக்கும். எனவே, எம்மைத் தெரிவுசெய்யுங்கள் என்றார்.

இக்கூட்டத்தில் கொழும்பு மேற்கு வேட்பாளர் ஜனகன், கொழும்பு மத்தி வேட்பாளர் ஜெ.தயாளன் ஆகியோரும் உரையாற்றினர். (க)

# புலிகளின் கடல் இறைமை குறித்து ரணில் விளக்கம் அளிக்கவேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்து

(கொழும்பு)

தமிழர் தாயகப் பிரதேச கடல் இறைமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விளக்கம் அளிக்க வேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ரணிலுக்கு ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளர் விமல் வீரவன்ஸ அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளதாவது,

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச் சாத்திடப்பட்ட தரப்பினரில் ஐக்கிய தேசியக்கட்சியும் ஒன்று.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடல்சார் உரிமை இல்லை என்று கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அத்தகைய உரிமை தங்களுக்கு உண்டு என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐக்கிய தேசியக்கட்சி தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் கருத்துக்கு மாற்றான கருத்தை ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தினால் இந்த நாட்டுக்கான நல்ல செயல் அது. ஏனெனில் விடுதலைப் புலிகளின் அறிவித்தல் இந்த நாட்டுக்கு அச்சுறுத்தலானது.

மேலும் துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையாததுதான் பேச்சுக்களுக்கு முட்டுக் கட்டையாக இருப்பதாக நீங்கள் அண்மையில் அமெரிக்காவில் உரையாற்றியுள்ளீர்கள்.

உங்களுடைய ஆட்சிக்காலத்தில் துணை இராணுவக் குழுவினர் எனக் கூறப்படுவோர் மீதான நடவடிக்கை என்ன? அது தொடர்பிலும் தாங்கள் விளக்கவேண்டும்.

கருணா குழுவானது ஒரு துணை இராணுவக் குழு அல்ல. அது அதிருப்தி குழு. விடுதலைப் புலிகளின் ஆயுதங்களையே அவர்களும் வைத்துள்ளனர். அரச படைகளுடன் இணைந்துள்ள ஈ.பி.டி.பி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் போன்றவை அல்ல. ஆகையால் கருணா குழுவை துணை இராணுவக் குழுவாக நீங்கள் குறிப்பிட்டது தவறானது என்று அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இரு தரப்பையும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு டோக்கியோ மாநாட்டில் வலியுறுத்துவோம்

## என்கிறார் அமெரிக்க துணைச்செயலாளர்

(கொழும்பு)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் மீண்டும் பேச்சு மேசைக்கு அழைத்துவருவது குறித்து விரிவாக ஆராயவுள்ளதாக அமெரிக்க அரசதுறையின் துணைச் செயலாளர் நிக்கலோஸ் பேன்ஸ் தெரிவித்துள்ளார்.


வாஷிங்டன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் கூறுகையில், இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நெருங்கி வருகிறது. இது குறித்து அமெரிக்கா மிக அவதானத்துடன் உள்ளது. இலங்கையில் நெருக்கடி நிலை குறித்து எமக்கு கவலையளிக்கிறது.

அப்பாவி மக்கள் தினமும் படுகொலை செய்யப்படுகின்றனர். உடமைகளை இழந்து ஊர்விட்டு ஊர் செல்கின்றனர். மக்கள் மத்தியில் மீண்டும் போர் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாகபேச்சுவார்த்தைக்கு சமுகமளிக்கவேண்டும். தமிழ் மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு தாக்குதல்களை மேற்கொள்வதை கைவிடவேண்டும்.

அவர்களின் தாக்குதல்களில் அப்பாவி மக்களும் பலியாகின்றார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இந்த விடயத்தில் அரசும் மிக அவதானமாக நடக்கவேண்டும். இது பற்றி டோக்கியோ மாநாட்டில் நாம் இரு தரப்புக்கும் வலியுறுத்துவோம் என்றார். (க-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



**விதி வழி மதி செல்லும் என்று பொதுவாகச் சொல்வது வழக்கம். இறைவன் அருளால் விதியையும் வெல்ல முடியும். மதியையும் வெல்ல முடியும்.**

சுவாமி விவேகானந்தர்

# வன்னி செல்வதற்கு வசதிசெய்யுமாறு அல்லைப்பிட்டி மக்கள் கோரிக்கை

(அல்லைப்பிட்டி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ்வதன் மூலமே தமது உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க முடியுமென அல்லைப்பிட்டியில் வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளிடம் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.


பிலிப் நேரியார் ஆலயத்தில் அல்லைப்பிட்டி மக்களின் நிலைகுறித்து நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதற்கு வண.பிதா சகாயராசா தலைமை தாங்கினார்.

இந் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், மேலதிக அரச அதிபர் சி.சிவசுவாமி, வேலணைப்பிரதேச செயலாளர் க.நந்தகோபாலன் மற்றும் யு.என்.எச்.சி.ஆர், ஐ.சி.ஆர்.சி, யுனிசெப் ,வேல்ட்விசன், ஜீ.ரி.சற். மற்றும் வன்முறைகளுக்கு எதிரான அமைப்பு என உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அல்லைப்பிட்டியில் வாழும் சுமார் 180 குடும்பங்களின் உறுப்பினர்களும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். கடற்படையினரும் ஈ.பி.டி.பி.துணை இராணுவக் குழுவினரும் கடந்த சனிக்கிழமை நடத்திய படுகொலைகளானது எமது உயிருக்கு எந்த ஒரு உத்தரவாதமும் இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் நாம் தொடர்ந்து அல்லைப்பிட்டியில் வாழ்வதாக இருந்தால் எமது உயிருக்கு உத்தரவாதம் தரப்படவேண்டும். இதனை அரசாங்க அதிபரோ அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களோ தருவதாக இருந்தால் நாம் இங்கு வாழமுடியும்.

தற்போதைய நிலையில் யாருடைய உயிருக்கும் யாரும் பாதுகாப்புத் தரக்கூடிய நிலை இல்லை. இதனால் நாங்கள் இங்கிருந்து வன்னி செல்வதற்கான பாதுகாப்பை ஏற்படுத்தித்தாருங்கள் என அவர்கள் கேட்டுக் கொண்டனர்.



எவ்வாறாயினும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தம்மைக் காப்பாற்றுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேவேளை அல்லைப்பிட்டியில் இருந்து வேறு இடங்களுக்கு மக்களை கொண்டு செல்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது . (ச-05)

# வேலை நேரங்களை மாற்ற அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் நடைபெறும் நேரங்களில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாடசாலைகள் காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை செயற்படுவதற்கும் அரச அலுவலகங்கள் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.15 மணி வரை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பபட்டுள்ளது.

இது ஒரு கொள்கை ரீதியான முடிபு எனவும் நடைமுறைப்படுத்தப்படும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அரசாங்கம் கூறியுள்ளது.

இலங்கை நேரத்தை அரை மணித்தியாலத்தால் நகர்த்திய நடைமுறைக்கு அமைவாக நேரமாற்றம் மேற்கொள்ளப்படுவது சிறந்தது என அமைச்சரவைத் தெரிவுக்குழு ஆலோசனை கூறியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

தெரிவுக்குழுவில் அமைச்சர்களான சரத் அமுனுகம, சுசில்பிறேமஜெயந்த,மகிந்த சமரசிங்க ,ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இதற்கமைய வேலை நேரத்தை மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளது. (ச-05)

## சிப்பாய் பலி

ஏ-9 வீதியில் உள்ள முகமாலை இராணுவச் சோதனைச்சாவடித் தொகுதியின் முன்னணிக்காவலரணில் கடமையில் இருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய சினைப்பர் சூட்டுத்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளதாக இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றதாக இராணுவம் தெரிவித்துள்ளது. இதேவேளை முன்னேறி வந்த இராணுவத்தினர் முகமாலையில் உள்ள தமது முன்னணி காவலரண்கள் இரண்டின் மீது தாக்குதல் நடத்தியதாக புலிகள் அறிவித்துள்ளனர். இச் சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் புலிகளினால் வெளியிடப்பட வில்லை. (ச-05)

# குடத்தனைக்குச் செல்ல வெளியாருக்குத் தடை

மணற்காடு, குடத்தனைப் பகுதியில் வசிக்கும் மக்கள் மட்டுமே அப்பகுதிக்குச் செல்ல இராணுவத்தினரால் அனுமதிக்கப்படுகின்றனர்.

வல்லிபுரம் ஆழ்வார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீதித்தடையில் அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டு குடத்தனை, மணற்காடு என குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அப் பகுதியில் வாழும் மக்களின் உறவினர்கள் கூட அங்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடற்றொழிலுக்குச் செல்பவர்களுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-15,132,133)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தபால் சேவை மீண்டும் ஆரம்பம்

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் யாழ்.குடாநாட்டு மக்களின் நன்மை கருதி தபால் சேவை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தொடரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் மக்களை படுகொலை செய்தல் போன்றவற்றை அடுத்து பொது அமைப்புகள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க பணிப்புறக்கணிப்பு மேற் கொள்ளப்பட்டுவருவது தெரிந்ததே.

இந் நிலையில் ஓய்வூதியர்கள் மற்றும் இம்முறை க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு அனுமதி அட்டைகளின் விநியோகம் என்பதைக் கருத்தில் கொண்டு தற்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தபால் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச

## கொலையாளி...

தெரிவித்துள்ளார்.

அவர்களை நேரில் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்றும் கூறிய இரண்டாவது சாட்சி, மூன்றாவது நபர் புதியவராக இருந்ததாக தெரிவித்தார்.

தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என தெரிவித்த அவர்கள் சம்பவம் நடைபெற்ற போதும் அதன் பின்னரும் கடற்படையினர் பாதுகாப்பு வழங்க வில்லை. பொலிஸார் கூட சம்பவ இடத்திற்கு வர வில்லை என சாட்சிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி றொக்ஸி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச-05)

## இந்தியக் கடற்...

இறையாண்மை கொண்ட அரசாங்கமும் நாடும் தான் இருக்கமுடியும் என்பது ஒரு பொதுவான புரிதலாக இருந்து வருவதாக கூறினார்.அப்படியானால் அங்கீகாரம் அற்று செயற்படும் விடுதலைப்புலிகளின் கடற்படை மீது தாக்குதல் நடத்தும் திட்டம் எதுவும் உங்களிடம் இருக்கிறதா என்று கேட்கப்பட்ட போது அப்படிப்பட்ட எந்தத்திட்டமும் தங்களிடம் இல்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான பேர்ள்க்ரூஸ் கப்பல் மீது புலிகளின் கடற்பிரிவு தாக்குதல் நடத்தியபோது அந்தத்தாக்குதலில் இருந்து அந்தக் கப்பலை இந்தியக் கடற்படை காப்பாற்றி பாதுகாப்பாக கரைசேர்த்தாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியானதாக கூறப்படும் செய்திகளையும் அவர் மறுத்தார்.

சமீப காலமாக அதிகரித்து வரும் இலங்கை தமிழ் அகதிகளின் வருகையைப் பற்றி கருத்துத் தெரிவித்த அவர் இதை தாங்கள் கூர்ந்து கவனித்து வருவதாகவும் அகதிகளின் வருகை குறித்து தற்போதைக்கு பெரிய அளவில் கவலை கொள்வதற்கு ஒன்றும் இல்லை என்றும் தெரிவித்தார். (ச-05)

## ஐரோப்பிய ஒன்றியம் தடை...

சர்வதேச சமூகத்திடம் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்தும் வகையிலான தென்னிலங்கை கடும்போக்காளர்களின் இந்தக் கோரிக்கையானது ஆயுத வழித்தீர்வை கைக்கொள்வதற்கான ஒரு முன்னோட்டமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை போரின் மூலம் தோற்கடிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்ற தென்னிலங்கையின் கடும்போக்காளர்களுக்கு இந்த தடை நடவடிக்கைகள் உற்சாகமளிக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை மேலும் சர்வதேச சமூகம் வேறுபடுத்தி ல்வக்குமானால் தமிழீழ விடுதலைப்புலிகளும் தங்களது கடும்போக்குப்பாணியை தொடர வேண்டிய நிலை ஏற்படும். எமது செயற்பாடுகளும் கொள்கைகளும் சர்வதேச சமூகத்தின் தலையீடுகளால் தீர்மானிக்கப்படுகிறவை அல்ல.

இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தமானது தற்போது ஒரு தணிவான யுத்தமாக மாற்றமடைந்துள்ளது.

இந்த நிலையில் சர்வதேச சமூகத்தினது தடை நடவடிக்கையானது சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் சிங்கள கடும்போக்காளர்கள் தங்களது வன்முறைகளை அதிகரிக்கவே உதவும்.

அவர்கள் போரின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்து விடலாம் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். அப்படியான ஒன்று நடைபெறுமேயானால் தமிழீழ விடுதலைப்புலிகளும் எதிர்ப்பு நடவடிக்கையை எடுக்கவேண்டிய நிலை ஏற்படுமென பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய தடையானது அமைதியை உருவாக்காது. போருக்கான நிலைமைகளையே உருவாக்கும். சிங்கள ஆக்கிரமிப்புப்படைகளால் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ள தமிழ்ப்பொதுமக்களது வாழ்வை சீர்குலைத்துவிடும். ‘விடுதலைப்புலிகள் மீதான தடை விதிக்கப்படுவது குறித்து ஓரிரு நாட்களில் முடிவெடுக்கப்படும்’ என்று றொய்டர் செய்தி நிறுவனத்திற்கு அளித்த நேர்காணலில் ஐரோப்பிய ஒன்றிய ராஜதந்திரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் பிரதிநிதி டெனால்ட் காம்பும் ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதிக்க அமெரிக்கா வலியுறுத்தும் என்று கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே பயணத்தடை விதித்திருந்தது. இருப்பினும் ஐரோப்பிய ஒன்றியக்கூட்டமைப்பில் உள்ள பல்வேறு நாடுகள் விடுதலைப்புலிகள் மீதான தடைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-05)





04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 19.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.